## 14. நம்பிக்கை த்ரோஹம் செய்யக் கூடாது!

அக்குளத்தில் நிறைய தவளைகள் வாழ்ந்தன.
மிகவும் சந்தோஷத்துடன் அவை ஒன்று சேர்ந்து வாழ்ந்தன.
குளக்கரையில் ஒரு பெரிய புற்று இருந்தது.
அதில் உள்ள பாம்புகளுக்கு இந்தத் தவளைகளை அப்படியே விழுங்கித் தின்ன ஆசை.
தவளைகள் ஏமார்ந்த வேளையில் அப்படி நடப்பதும் உண்டு.
தவளைகளின் தலைவனுக்கு இதைப் பற்றி ஒரே கவலை!
முடிந்தவரை ஜாக்ரதையாக இருக்கும் படி அடிக்கடி அறிவுரை கூறும்.
அது சில தவளைகளுக்குப் பிடிப்பது இல்லை.
ஒரு கோடைக்காலம்...
மட மட என்று குளம் வரண்டு போக ஆரம்பித்தது.
"என்ன செய்வது? வேறு இடம் தெரிந்து எப்படிப் போவது?" என்று தலைவன் தவளை யோசித்தது.
இதை அறிந்த பாம்புகள் மகிழ்ச்சி கொண்டன.
"கொஞ்ச தூரத்தில் பெரிய ஏரி உள்ளது. எங்கள் மீது ஏறிக் கொள்ளுங்கள்...உங்களைத் தூக்கிக் கொண்டு போய் அங்கே விட்டு விடுகிறோம்! எங்களை நம்புங்கள்!" என்றது பெரிய பாம்பு ஒன்று.
பல தவளைகள் இதை ஏற்றுக் கொண்டன.
ஆனால் தலவனுக்கோ சந்தேஹம்! இது மிக மிக ஆபத்து என்று கூறியது.
பல தவளைகள் அதை மறுத்தன.
தலைவனுக்கும் தெரியாமல் பாம்புகளுடன் செல்ல ஆரம்பித்தன.
போகும் பாதி வழியிலேயே பாம்புகள் தவளைகளை சாப்பிட்டன.
இதைப் பார்த்த மீன்கொத்தி தலைவனிடமும் மற்ற தவளைகளிடமும் தகவல் சொன்னது.
அனைவருக்கும் பயம் ஏற்பட்டது!
தலைவன் தவளை ஒரு முடிவுக்கு வந்தது. உடனே சென்று பாம்புகளைப் பார்த்து, "உங்களை நம்பி வரும் எங்களைக் கொல்கிறீர்கள்! பரவாயில்லை! நாளை ஒருநாள் உங்களுக்கும் இதே கதி வராது என்று சொல்ல முடியுமா? நம்பிக்கை த்ரோஹம் செய்தவருக்கு தண்டனை உண்டு. இதோ நாங்கள் எல்லோரும் வந்திருக்கிறோம், சாப்பிடுங்கள்!" என்று கூறியது.
தங்கள் பாவத்தை உணர்ந்த பாம்புகள் மிகவும் வருந்தின.
அதற்கு பதிலாக எவ்விதத் தீங்கும் இல்லாமல் அனைத்து தவளைகளையும் ஏரிக்குள் கொண்டு விட்டன.